# தேசபக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 042 ★11.06.2026 ★தமிழ் நாளிதழ் ★வியாழக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:042 ★11.06.2026 ★TamilDaily ★Thursday ★Page-4 ★Price-₹5/- Chennai


## 3 நாள் பயணமாக டெல்லி புறப்பட்டார் முதல்அமைச்சர் விஜய்

டெல்லியில் நாளை (11ந்தேதி) பிரதமர் மோடி தலைமையில் நிதி ஆயோக் கூட்டம் நடைபெறுகிறது. இதில் நாட்டின் அனைத்து மாநில முதல்மந்திரிகளும் பங்கேற்க உள்ளனர்.

இந்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தமிழக முதல்அமைச்சர் விஜய் இன்று காலை 10 மணியளவில் சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் டெல்லி புறப்பட்டுச் சென்றுள்ளார். டெல்லியில் நடைபெறும் நிதி ஆயோக் கூட்டத்தில் மாநிலத்தின்வளர்ச்சிதிட்டங்கள் மற்றும் பல்வேறு கோரிக்கைகள் குறித்து வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பயணத்தின் போது ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா உள்ளிட்ட முக்கிய தலைவர்களையும் சந்தித்து பேச உள்ளதாக கூறப்படுகிறது.



மேலும் சில தேசிய கட்சித் தலைவர்களையும் சந்திக்கும் நிகழ்ச்சிகள் இடம்பெறலாம் என தகவல் வெளியாகியுள்ளது. 3 நாள் பயணத்தை முடித்துக்கொண்டு முதல்அமைச்சர் வருகிற 12 ந்தேதி (வெள்ளி க்கிழமை)மாலைசென்னை திரும்புவார்எனவிமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

## குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உடன் முதல்வர் விஜய் சந்திப்பு

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை முதல்வர் விஜய் இன்று மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.



தமிழக முதல்வராக கடந்த மே 10ம் தேதி பதவியேற்ற விஜய், மே 27ம் தேதி முதல் முறையாக டெல்லி சென்று பிரதமர் மோடியைச் சந்தித்தார். அப்போது, தமிழகத்துக்கு தேவையான திட்டங்கள், நிதி ஒதுக்கீடு உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார்.

பின்னர் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனையும் சந்தித்த முதல்வர் விஜய், தமிழகத்துக்குத் தரவேண்டிய நிலுவை நிதி உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுகோள் விடுத்தார். இந்நிலையில், 2வது முறையாக 3 நாள் பயணமாக முதல்வர் விஜய் டெல்லி சென்றார். பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் அனைத்து மாநில முதல்வர் களுடனான நிதி ஆயோக் கூட்டம், டெல் லியில் நாளை (ஜூன் 11) நடைபெறுகிறது.

## சட்டசபை கூட்டத்தொடர்: கவர்னருக்கு சபாநாயகர் அழைப்பு

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விஜய் முதல் அமைச்சராக பதவியேற்றுள்ளார். புதிய அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில், வருகிற 18ஆம் தேதி சட்டப்பேரவை கூட உள்ளது. விஜய் முதல் அமைச்சரான பிறகு நடைபெறும் முதல் கூட்டத்தொடர் என்பதால், இந்த கூட்டத்தொடர் மீது பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.



புதிய அரசின் முதல் கூட்டத்தொடர் என்பதால், ஆளுநர் உரையுடன்கூட்டம்தொடங்குகிறது. இதற்காக கவர்னர் அர்லேகரை சந்தித்த சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர், நேரில் அழைப்பு விடுத்தார்.

கூட்டத்தொடரின் முதல் நாளான 18ஆம் தேதி கவர்னர் உரை நிகழ்த்த உள்ளார்.

முக்கிய அறிவிப்புகள் இருக்குமா?

தமிழ்த்தாய் வாழ்த்து விவகாரம், மின்வெட்டு பிரச்சினை, தமிழக வெற்றிக் கழகம் அளித்த தேர்தல் வாக்குறுதிகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளதால், இந்த கூட்டத்தொடர் அனல் பறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், பல்வேறு முக்கிய அறிவிப்புகளை முதல் அமைச்சர் விஜய் இந்த கூட்டத்தொடரில் வெளியிட வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது. முந்தைய தி.மு.க. ஆட்சியின் கடைசி கூட்டத்தொடரில் இடைக்கால பட்ஜெட் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனவே, வரவிருக்கும் கூட்டத்தொடரில் முழுமையான பட்ஜெட்டை தமிழக வெற்றிக் கழக அரசு தாக்கல் செய்ய உள்ளது. மேலும், தமிழகத்தின் நிதிநிலை தொடர்பாக வெள்ளை அறிக்கையை வெளியிடவும்அரசுதிட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சென்னையில் 125 சிறப்பு மின் தடைநீக்க ரோந்து வாகனங்கள்

### அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார் தொடங்கி வைத்தார்

சென்னை மற்றும் புறநகர்பகுதிகளில் பகிர்மான அளவில் பழுது மற்றும் இதர காரணங்களால் எதிர்பாராமல் இரவு நேரங்களில் ஏற்படும் மின் தடங்கல்களை விரைந்து சீர்செய்யும் வகையில் 10 கண்காணிப்பு குழுக்கள் மற்றும் 125 சிறப்பு மின் தடைநீக்க ரோந்து வாகனங்களின் இயக்கத்தினை எரிசக்தி மற்றும்சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் இன்று தொடங்கி வைத்தார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

“இன்று (10.05.2026) சென்னை மின்வாரிய தலைமை அலுவலகத்தில், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பகிர்மான அளவில் பழுது மற்றும் இதர காரணங்களால் எதிர்பாராமல் இரவு நேரங்களில் ஏற்படும் மின் தடங்கல்களை விரைந்து சீர்செய்யும் வகையில் 10 உயர்மட்ட கண்காணிப்பு குழுக்கள் மற்றும் 125 சிறப்பு மின் தடைநீக்க ரோந்து வாகனங்களின் இயக்கத்தினை எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. சி.டி.ஆர். நிர்மல் குமார்துவக்கி வைத்தார்.

மேலும், ஏற்கனவே செயல்பாட்டிலுள்ள மின்னகம் நீங்கலாக 70 மின்தடை நீக்க மையங்களுடன் (Fuse of Call) கூடுதலாக தற்போது 77 புதிய மின்தடை நீக்க மையங்கள் உருவாக்கப்பட்டு உடனடியாக செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படுகிறது.

கூடுதலாக, 5 எம்.ஆர்.டி. சிறப்பு குழுக்கள், உயரழுத்த மின் புதைவட மின் கேபிள் பழுதுகளை உடனுக்குடன் கண்டறிந்து சரிசெய்யும் உபகரணங்களுடன் கூடிய 4 சிறப்பு வாகனங்களும், உயரழுத்த மற்றும் அதிஉயரழுத்த மேல்நிலை கம்பிகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய 7 வாகனங்களும் தயார் நிலையில் உள்ளன.

தமிழ்நாட்டில் மின்சார உற்பத்தி மற்றும் மின் கொள்முதல் மூலம் போதியஅளவுமின்சாரம் கிடைக்கப்பெற்று வரும் நிலையில், சில நகர்ப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் புதைவட கேபிள் பழுது, மின்மாற்றி கோளாறு, மின்பாதை துண்டிப்பு, மழை மற்றும் காற்று உள்ளிட்ட பருவநிலை காரணிகள், ஆர்.எம்.யூ. பழுது மற்றும் அதிஉயரழுத்த மின் மாற்றிபழுதுகள்போன்ற எதிர்பாராத காரணங்களால் அவ்வப்போது ஏற்படும் மின் தடைகளை விரைவாக சரிசெய்து, நுகர்வோருக்கு தடையற்றமின்விநியோகத்தை வழங்கும் நோக்கில் மாண்புமிகு மின்சாரம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார்தலைமையில் தலைமைச் செயலாளர் முன்னிலையில் நேற்று (09.06.2026) விரிவான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில்,



தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் உத்தரவின்பேரில் மாநிலம் முழுவதும் மின் தடைகளை கண்காணித்து, மின் விநியோக மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக 10 சிறப்பு கண்காணிப்புக் குழுக்கள் உடனடியாக அமைக்கப்பட்டுள்ளன.

இக்குழுக்களுக்கு தேவையான கூடுதல் கண்காணிப்பு பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, ஏற்கனவே செயல்பட்டு வரும் பராமரிப்பு மற்றும் மொபைல் மீட்புக் குழுக்களுடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

சிறப்பு கண்காணிப்புக் குழுக்களின் முக்கிய பணிகள்

· முக்கிய மின்தடைகள் மற்றும் பழுதுகளை நிகழ்நேரத்தில் கண்காணித்தல்,

· பெரிய அளவிலான பழுதுகள் தொடர்பான தகவல்களை உடனடியாகப் பெறுதல்,

· மின் விநியோகத்தை மீட்டெடுக்கும் பணிகளின் முன்னேற்றத்தை கண்காணித்தல்,

· பின்னூட்டம் உள்ளிட்ட மாற்று மின் வழங்கல் ஏற்பாடுகளை ஒருங்கிணைத்தல்,

· மனிதவளம், வாகனங்கள், உபகரணங்கள் மற்றும் பராமரிப்புப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல்,

· மின்னகம் மற்றும் புகார் மையங்கள் மூலம் பெறப்படும் புகார்களை ஆய்வு செய்தல்,

· மின் விநியோக மீட்பு குறித்த தகவல்களை நுகர்வோருக்கு உடனுக்குடன் தெரிவிப்பதை உறுதி செய்தல்,

· மீண்டும் மீண்டும் பழுதுகள் ஏற்படும் பகுதிகளை கண்டறிந்து நிரந்தர தீர்வுகளுக்கான பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

சிறப்பு கவனம் செலுத்தப்படும் பகுதிகள்

மீண்டும் மீண்டும் ஏற்படும் கேபிள் பழுதுகள், நீண்ட நேர மின் தடைகள், மின்மாற்றி கோளாறுகள், பீடர் துண்டிப்புகள், துணை மின் நிலைய உபகரண கோளாறுகள், குடிநீர், மருத்துவமனைகள் மற்றும் பிற அத்தியாவசிய சேவைகள்

பாதிக்கப்படும் பகுதிகள், மின்னகம் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக அதிக புகார்கள் பெறப்படும் பகுதிகள் ஆகியவற்றின் மீது இக்குழுக்கள் சிறப்பு கவனம் செலுத்தும்.

கள அலுவலர்களுக்கு கூடுதல் நிதி அதிகாரம்

அவசரகால பராமரிப்பு மற்றும் உடனடி மின் விநியோக மீட்பு பணிகளை விரைவாக மேற்கொள்ளும் வகையில் தலைமைப் பொறியாளர்

...தொடர்ச்சி 2 ம் பக்கம் பார்க்க

## ‘சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை முதல்அமைச்சரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும்’ ஐ.ஜி. பவானீஸ்வரி

முதல் அமைச்சராக விஜய் பொறுப்பேற்றவுடன், குழந்தைகள், பெண்கள் பாதுகாப்புக்காகசிங்கப்பெண்சிறப்பு அதிரடிப் படை உருவாக்கப்படும் என்று அறிவித்தார். இதைத்தொடர்ந்து, இந்த அதிரடிப்படையின் முதல் பெண் ஐ.ஜி.யாக பவானீஸ்வரி நியமிக்கப்பட்டு உள்ளார். இந்த படையில் ஒரு போலீஸ் சூப்பிரண்டு, 2 துணை போலீஸ்சூப்பிரண்டுகள் மற்றும் 4 இன்ஸ்பெக்டர்கள் உள்பட 30க்கும் மேற்பட்ட போலீசார் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த அதிரடிப்படையில்இடம்பெறும்பெண் போலீஸ் மற்றும் பெண் சப் இன்ஸ்பெக்டர்களுக்கு நீல நிற சட்டை, காக்கி நிற பேண்ட் என சிறப்பு சீருடை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கருப்பு நிற தொப்பியும், கருப்பு நிற ஷூவும் வழங்கப்பட்டுள்ளது. சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையை முதல்அமைச்சர் விஜய் நேற்றுமாலை 5 மணிக்கு சென்னை ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் தொடங்கி வைத்தார்.

இந்நிலையில், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படைமுதல்அமைச்சரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் என ஐ.ஜி. பவானீஸ்வரி தெரிவித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது;

“சிங்கப்பெண் அதிரடிப்படை என்பது பெண்களின் பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். முதற்கட்டமாக 140 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 420 காவலர்களின் உதவியுடன், சிங்கப்பெண் அதிரடிப்படையின் 70 கள செயல்பாட்டுப் பிரிவுகள் தமிழ்நாடு முழுவதும் இயங்கத் தொடங்கும்.

மாநிலம் முழுவதும் இந்தப் பிரிவிற்காக பிரத்தியேகமாக மொத்தம் 2,545 புதிய பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த பணியில் சேர்க்கப்படும் காவலர்கள் பல்வேறு காவல்துணைப்பிரிவுகள் மற்றும் நகர சரகங்களில் உள்ள 270 வரையிலான



களப் பிரிவுகளைக் கண்காணிப்பார்கள். இந்த வலையமைப்பை நிர்வகிப்பதில் தலைமையகத்திற்கு உதவுவதற்காக, ஒரு காவல் கண்காணிப்பாளர் (SP), இரண்டு துணை காவல் கண்காணிப்பாளர்கள், நான்கு ஆய்வாளர்கள் மற்றும் எட்டு உதவி ஆய்வாளர்கள் (SI) உள்ளிட்ட பிரத்யேக அதிகாரிகள் பணியில் சேர்க்கப்பட உள்ளனர்.

சிங்கப்பெண் அதிரடிப்படையானது, பெண்களின் பாதுகாப்பிற்காக நாட்டில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட டிரோன் அடிப்படையிலான ரோந்து அமைப்புகள் மற்றும் கட்டுப்பாட்டு அறைகளுடன் நேரடியாக இணைக்கப்பட்ட, நேரலை ஒளிபரப்புத் திறன் கொண்ட உடலில் அணியும் கேமராக்களுடன் செயல்படுத்தப்படும். முழுவதும் பெண்களைக் கொண்ட இந்த ரோந்து குழுக்கள், 319 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 101 இரு சக்கர வாகனங்களை பயன்படுத்தி களத்தில் இயங்கும்.

ஒரு பெண் சிங்கம் மற்றும் ஒரு பெண் காவலர் இடம்பெற்ற சின்னம் பொறிக்கப்பட்ட, தனித்துவமான சீருடையான காக்கி நிற கால்சட்டை மற்றும் நீல நிற சட்டைகள் மூலம் சிங்கப்பெண் அதிரடிப்படை காவலர்கள்அடையாளம்காணப்படுவார்கள்.

பதற்றமான பகுதிகளைக் கண்காணித்தல், பாதுகாப்பு தணிக்கைகளைமேற்கொள்ளுதல், பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் ரோந்துப் பணியில் ஈடுபடுதல், 'காவல்உதவி'மொபைல் செயலி மூலம் வரும் அவசரஅழைப்புகளுக்கு விரைவாக பதிலளித்தல், மற்றும் பள்ளிகள், கல்லூரிகள், பணியிடங்களில் மக்களைச் சென்றடைந்து ஆலோசனை வழங்கும்திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவை இந்தப் படையின் முக்கியப் பொறுப்புகளாகும். இந்தப் படையில் சேர்க்கப்படும் பணியாளர்களுக்கு கடுமையான பயிற்சி அளிக்கப்படும்.

பாலியல் துன்புறுத்தல், பின்தொடர்தல் மற்றும் பொது இடத்தில் ஆபாசமாக நடந்துகொள்ளுதல் போன்ற குற்றங்களில் ஈடுபடுவோர் மீது விரைவான, பூஜ்ஜிய சகிப்புத் தன்மை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளையில், அப்பாவி நபர்களை தவறாக சிக்க வைப்பதைத் காவல்துறையினர் தவிர்க்க வேண்டும்.”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.




# பாரிவாக்கம் சிக்னலில் 10 கிலோ கஞ்சா பறிமுதல் : இருவர் கைது

**செங்குன்றம், ஜூன் 11:** ஆவடி காவல் ஆணையரகத்திற்கு உட்பட்ட பூந்தமல்லி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு போலீசார் பாரிவாக்கம் சிக்னல் அருகே கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது, அங்கு சந்தேகத்திற்கிடமாக சுற்றித் திரிந்த கேரள மாநிலத்தைச் சேர்ந்த சுஜித் (26), ராய் ஜாய் (20) ஆகியோரிடம் விசாரணை மேற்கொண்டு சோதனை செய்ததில், அவர்களிடமிருந்து தலா 05 கிலோ வீதம் மொத்தம் சுமார் 10 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், குற்றவாளிகள் கஞ்சாவை ஒடிசா மாநிலத்திலிருந்து வாங்கி வந்து பூந்தமல்லி பகுதியில் விற்பனை செய்வதற்காக கொண்டு வந்தது தெரியவந்தது. இதையடுத்து, குற்றவாளிகள் மீது பூந்தமல்லி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் வழக்குப் பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# பூதூர், கும்மனூர், ஆங்காடு, அருமந்தை, விச்சூர் உள்ளிட்ட சுற்றுவட்டாரங்களில் மின் விநியோக நிறுத்தம்




**செங்குன்றம், ஜூன் 11:** சோத்துப்பெரும்பேடு துணைமின்நிலையத்தில் மாதாந்திர அத்தியாவசிய மின் சாதனப் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதால் 11.06.2026 வியாழக்கிழமை அன்று காலை 9 மணி முதல் மாலை 50 மணி வரை சோழவரம் அடுத்த கிருதலாபுரம், பூதூர், கும்மனூர், ஆங்காடு, அருமந்தை, விச்சூர், வெள்ளிவாயல் கண்டிகை, மாரம்பேடு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் மின் விநியோகம் நிறுத்தப்படும் என சென்னை மின் பகிர்மான வட்டம் (மேற்கு) / ரெட்ஹில்ஸ் இயக்கம் & பராமரிப்பு உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

1 ம் பக்கம் தொடர்ச்சி ...

களுக்கு ரூ.1 லட்சம் வரை, கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு ரூ.75,000 வரை, செயற்பொறியாளர்களுக்கு ரூ.50,000 வரை, உதவி செயற்பொறியாளர்களுக்கு ரூ.25,000 வரை மற்றும் உதவிப் பொறியாளர்கள்/இளநிலைப் பொறியாளர்களுக்கு ரூ.10,000 வரை அவசர செலவினத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கூடுதல் செலவினங்களுக்கும் தேவையான தொகை உடனடியாக வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் வலுப்படுத்தப்படும் மின் சேவை

தமிழ்நாடு தற்போது சுமார் 3.52 கோடி மின் நுகர்வோர்களுக்கு சேவை வழங்கி வருகிறது. 1,910 துணை மின் நிலையங்கள், 4.47 லட்சத்திற்கும் அதிகமான மின்மாற்றிகள் மற்றும் விரிவான மின் விநியோக கட்டமைப்பின் மூலம் பொதுமக்களுக்கு மின் சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

இத்தகைய பரந்த மின் கட்டமைப்பில் ஏற்படும் பழுதுகளை விரைவாக சரிசெய்து, மின் தடைகளின் கால அளவை குறைத்து, நுகர்வோர் திருப்தியை மேம்படுத்தும் நோக்கில் இந்த சிறப்பு கண்காணிப்புக் குழுக்கள் செயல்படும்.

சென்னை சிறப்பு கண்காணிப்பு குழு – TNEB கண்காணிப்பு குழுக்கள் TNPDCLஇன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (CMD) அனைத்து குழுக்களுக்கும் வழிகாட்டுவார். தேவையான இடங்களில் நேரடியாக ஆய்வுகளையும் மேற்கொள்வார்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாடியநல்லூர் முனீஸ்வரர் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஆலய 44ஆம் ஆண்டு தீமிதி திருவிழா

**செங்குன்றம், ஜூன் 11 :** மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி அருள்மிகு முனீஸ்வரர் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஆலயத்தில் 44ஆம் ஆண்டு தீமிதி திருவிழா ஆர்.செல்வராஜ், ஆலய நிர்வாகிகள் சுமோ ரவி, சுரேஷ், மோகன்ராஜ், கார்த்திக், அர்ஜுன், காளிமுத்து, தன்ராஜ், சாய், இளையராஜா, தினேஷ், நாகராஜ் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கணபதி ஹோமம், மஞ்சள்நீர் எடுத்தல், பால்குடம் எடுத்தல், அக்னி கப்பறை எடுத்தல் போன்ற பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் 100க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர்.

இத்திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உட்பட கிராம பொதுமக்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். முடிவில் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது.



# ஆதிதிராவிடர், பழங்குடியின இளைஞர்களுக்கு தாட்கோவின் அசத்தல் வாய்ப்பு

## அழகுக்கலை, சிகை அலங்காரப் பயிற்சியுடன் மாதம் ரூ.25 ஆயிரம் வரை வேலைவாய்ப்பு

**திருவண்ணாமலை, ஜூலை 11:** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் திறன்களை மேம்படுத்தி, சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கும் நோக்கில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பில் சிறப்பு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார். இதன்படி, Master Certification in Bridal Makeup Artistry மற்றும் Diploma in Creative Hair Chemical Treatment ஆகிய அழகுக்கலை மற்றும் சிகை அலங்காரத் துறைகளில் தொழில்முறை பயிற்சிகள் நடத்தப்பட உள்ளன. இப்பயிற்சியில் சேர விரும்புவோர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். மேலும், பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரர்களின் வயது 18 முதல் 35 வயதிற்குள் இருக்க வேண்டும். குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.3 லட்சத்திற்குள் இருக்க வேண்டும் என தகுதி நிபந்தனைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.45 நாட்கள் கால அளவில் நடைபெறும் இந்தப் பயிற்சி திருச்சி மாவட்டத்தில் நடத்தப்பட உள்ளது. பயிற்சியில் தேர்வு செய்யப்படும் நபர்களுக்கான தங்குமிடம் மற்றும் அதற்கான செலவினங்களை தாட்கோ நிறுவனம் முழுமையாக ஏற்கும். பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் இளைஞர்களுக்கு, பயிற்சி வழங்கும் நிறுவனங்களின் மூலம் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்யப்படுவதுடன்,ஆரம்பமாதஊதியமாகரூ.15,000 முதல் ரூ.25,000 வரை பெறும் வாய்ப்பும் ஏற்படுத்தித் தரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அழகுக்கலை மற்றும் சிகை அலங்காரத் துறைகளில் தனித்தொழில் தொடங்குவதற்கும் இந்தப் பயிற்சி பெரிதும் உதவும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, தகுதியும் விருப்பமும் கொண்ட திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள், www.tahdco.com என்ற இணையதளத்தில் பதிவு செய்து இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக் கொண்டுள்ளார்.

இளைஞர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் தொழில்துறை திறன் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் இந்தத் திட்டம், தாட்கோவின் முக்கிய வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகராட்சிRAR தனியார் திருமண மண்டபத்தில் மாற்றுக் கட்சியிலிருந்து விலகி 500க்கும் மேற்பட்டோர் த.வெ.ககட்சியில்இணையும்நிகழ்ச்சிAMJFLion.Dஜெர்லின்ஜோஸ்BA12வது வார்டுகவுன்சிலர்ஏற்பாட்டில்சிறப்புஅழைப்பாளர்மாவட்டகழகசெயலாளர் எம்.எஸ் பாலாஜி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் நகரத்தலைவர் பெருமாள் 14 வது வார்டு கவுன்சிலர் சசிகுமார் மற்றும் நகர கழக நிர்வாகிகள் மகளிர்கள் முன்னிலையில் மாற்றுக் கட்சியிலிருந்து த.வெ.க கட்சியில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் ஏராளமான த.வெ.க நிர்வாகிகள் கலந்துகொண்டனர். தொடர்ந்து விசில் சின்னத்திற்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பும் தெரிவிக்கப்பட்டது. கலந்துகொண்ட அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.



# கடையநல்லூர் விழுதுகள் ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தில் தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு

**தென்காசி, ஜூன் 11** தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் செயல்படும் விழுதுகள் ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத்சிங், செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் செயல்படும் விழுதுகள் ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் இயன்முறை சிகிச்சையினை பார்வையிட்டு, மாற்றுத்திறனாளிகளின் வருகையினை spds App மூலம் பதிவு செய்வது குறித்தும், மாற்றுத்திறனாளிகளுக்கு பயிற்சியின் தன்மை குறித்தும், மாற்றுத்திறனாளி மாணவருக்கு அறிவுத்திறன் மற்றும் திறன் வளர்ப்பு, உணர்ச்சிகளின் தன்மைகள் குறித்து உளவியல் நிபுணர்கள் மூலம் பயிற்சி வழங்கப்படுவதையும், மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு விதமான பயிற்சிகள் வழங்கப்படுவதை தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத்சிங், செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் (பொ) ஜெயபிரகாஷ், இயன்முறை நிபுணர் டாக்டர் தனலெட்சுமி, உளவியல் நிபுணர் டாக்டர்.சக்தி, மேலாளர் டாக்டர் .வித்யா மற்றும் அலுவலர்கள்உடனிருந்தனர்.



இராணிப்பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா இ.ஆ.ப., ஆற்காடு வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை மையம் வளாகத்தில் அமைந்துள்ள மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு வைப்பறையினை அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் திறந்து, காலாண்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் பேபிஇந்திரா,வருவாய்கோட்டாட்சியர்ராஜி,நேர்முகஉதவியாளர்(தேர்தல்) பூமா, வட்டாட்சியர் செல்வி.வசந்தி மற்றும் பலர் உள்ளனர்.





# இராணிப்பேட்டையில் மதுவிலக்கு குற்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட 18 வாகனங்கள் பொது ஏலம்

**இராணிப்பேட்டை, ஜூன்.11** இராணிப்பேட்டை மாவட்டம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவுகாவல் துறையினரால் மதுவிலக்கு குற்ற வழக்குகளில் தொடர்பாக பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களுக்கான பொது ஏலம் செவ்வாய்கிழமை(09.06.2026) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பே.சிபின் இ.கா.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஏலத்தில் ஒரு நான்கு சக்கர வாகனம், ஒரு மூன்று சக்கர வாகனம் மற்றும் 16 இருசக்கர வாகனங்கள் பொது ஏலம் விடப்பட்டு மொத்தம் ரூபாய் 5,35,130/ அரசுக்கு ஆதாயமாக பெறப்பட்டது.

# சின்னமனூரில் திருமண நாள் விழாவை முன்னிட்டு 328வது திருவாசகம் முற்றோதல் நிகழ்வு கோலாகலம்

**சின்னமனூர், ஜூன்.11:**
தேனி மாவட்டம் சின்னமனூர் அண்ணாமலை நகரில் உள்ள திரு. பிரபாகரன், தலைமை ஆசிரியர் திருமதி. உமாமகேஸ்வரி ஆசிரியை கப் பேரவையின் செயலாளர் திரு. ராமலிங்கம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த ஆன்மீக வழிபாட்டில், சிவனடியார்கள் செழியன், சண்முகம், முத்துக்கருப்பையா, பான ஏற்பாடுகளை ஷியாம் சுந்தர் மற்றும் நாகேஸ்வரன் ஆகியோர் செய்திருந்தனர். இந்நிகழ்வில் குடும்ப உறுப்பினர்களான ஜெயபிரகாஷ், சிதம்பர ஜீவானந்தம், ஜெயச்சந்திரன்



தம்பதியரின் இல்லத்தில், திருமண நாள் விழாவை முன்னிட்டு 328வது திருவாசகம் முற்றோதல் ஞான வேள்வி மிகச் சிறப்பாக நடைபெற்றது. தெய்வீ பவானி, லதா, நிர்மலா உள்ளிட்ட ஏராளமான சிவனடியார்கள் திரளாகக் கலந்துகொண்டு திருவாசகப் பாடல்களை முற்றோதல் செய்தனர். இவ்விழாவிற்கான சிறப் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த ஆன்மீக அன்பர்கள், சக ஆசிரிய பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# உலமாக்களுக்கு ரூ.50,000 இருசக்கர வாகன மானியம்: விண்ணப்பிக்க திருவண்ணாமலைஆட்சியர் வந்தனா கார்க் அழைப்பு

**திருவண்ணாமலை, ஜூன் 11:**
தமிழ்நாடு அரசின் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் மூலம் பள்ளிவாசல்களில் பணியாற்றும் உலமாக்களின் நலனை மேம்படுத்தும் வகையில், புதிய இருசக்கர வாகனம் வாங்க ரூ.50,000 மானியம் வழங்கும் சிறப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



இத்திட்டத்தின் கீழ், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 18 முதல் 60 வயதுக்குட்பட்ட உலமாக்கள் பயனடையலாம். குறிப்பாக, தமிழ்நாட்டிலுள்ள பள்ளிவாசல்களில் பணியாற்றி வரும் பேஷ் இமாம்கள், ஆலிம்கள், அரபி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் உள்ளிட்டோர் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

மானிய உதவியை பெற விரும்பும் உலமாக்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் செயல்பட்டு வரும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அல்லது சிறுபான்மையினர் நல அலுவலரிடம் இருந்து விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரர்கள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து அதிகாரப்பூர்வ ஒப்புதல் பெற்ற பின்னரே புதிய இருசக்கர வாகனத்தை வாங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறுவதற்கு முன்பாக வாகனம் வாங்கப்பட்டிருந்தால் மானிய உதவி வழங்கப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தேவையான ஆவணங்களுடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் அல்லது சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் வரும் 30.06.2026க்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

எனவே, தகுதியுடைய உலமாக்கள் தமிழக அரசின் இந்த நலத்திட்டத்தை பயன்படுத்தி பயனடையுமாறு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனாகார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.




# செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி மாதாந்திரக் கூட்டம்

**செங்குன்றம், ஜூன் 11 :**
மாதவரம் தொகுதி நாரவாரிகுப்பம் (செங்குன்றம்) தேர்வுநிலை பேரூராட்சி கூட்டம் பேரூராட்சித் தலைவர் கு.தமிழரசி குமார் தலைமையில் பேரூராட்சி கட்டிடம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

பேரூராட்சி துணைத் தலைவர் ஆர்.இ.ஆர். விப்ர நாராயணன், இளநிலை உதவியாளர் பங்கஜம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செங்குன்றம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு பணிகள் நடைபெறுவதற்கு நிதியை ஒதுக்கித் தந்து ஒத்துழைப்பு நல்கிய தமிழ்நாடு முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்டோருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமும், தமிழ்நாடு முதல்வர் விஜய், எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு தலைவர், துணைத்தலைவர், பேரூராட்சி கவுன்சிலர்கள் வாழ்த்துகளைத் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. சாலை, குடிநீர் உள்ளிட்ட பொதுமக்கள் அடிப்படை வசதிகள் குறித்தும் பல்வேறு விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பேரூராட்சி கவுன்சிலர்கள் லதா கணேசன், எஸ்.கார்த்திக் கோட்டீஸ்வரன், தெய்வானை கபிலன், லீலாவதி சாந்தகுமார், கே.ஆர்,ரமேஷ், வினோதினி பாலாஜி, கோமதி பாஸ்கர், ஸ்ரீதேவி தேவராஜ், கு.மோகன், என்.ராதாகிருஷ்ணன், என்எம்டி. இளங்கோவன், கே.கோதண்டராமன் உள்ளிட்ட பேரூராட்சி பணியாளர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



# தென்காசி மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் வளர்ச்சிப் பணிகள்; மாவட்ட ஆட்சியர் ஆய்வு

**தென்காசி, ஜூன் 11**
தென்காசி மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத்சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொடிக்குறிச்சி ஊராட்சியில் உள்ள மூலிகைத் தோட்ட வளாகத்தில் அமைக்கப் பட்டுள்ள நெகிழி கழிவு மையம், மண்புழு உரம் தயாரிக்கும் பணிகளையும், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் பயனாளி வீடு கட்டும் திட்டப்பணிகளையும், சிவராமப்பேட்டை கிராமத்தில் சாண எரிவாயு கலன் பயன்பாடுகள் குறித்தும், அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம், எடை மற்றும் உயரம். கற்றல்திறன் குறித்தும், ஊர்ப்புற நூலகத்தில் பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் வருகை குறித்தும், நயினாரகரம் ஊராட்சி வள்ளியம்மாள் புரத்தில் பேரி அர்பன் திட்டத்தின் கீழ் ரூ.847 இலட்சம் மதிப்பீட்டில் வாறுகால் அமைக்கப் பட்டுள்ள பணிகளையும், அருணகிரிபுரம் அங்கன்வாடி வடக்குத்தெருவில் பேரி அர்பன் திட்டத்தின் கீழ் 15.7.40 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ள பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, கடையநல்லூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் திட்டப்பணிகளையும், 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் ரூ.46 இலட்சம் மதிப்பீட்டில் நாய்கள் காப்பகம் அமைக்கப்பட்டு வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், அறிவுறுத்தினார். பின்னர் கடையநல்லூர் வேளாண் விற்பனைக்கூட வளாகத்தில் உள்ள நெல்கொள்முதல் நிலையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார். இந்நிகழ்வில், கடையநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜசேகர், உதவிப் பொறியாளர்கள் மார்க்கோனி, கௌவாசஹிரா ஆகியோர் உடனிருந்தனர்.



# வாரந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்

வாரந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் நடந்தது.

இராணிப்பேட்டை மாவட்ட காவல் அலுவலகத்தில் 10.06.2026 தேதி வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பே.சிபின், இ.கா.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 33 மனுக்கள் பெறப்பட்டன.

மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்தார்கள்.

# பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு இலவச விடுதி வசதி: விண்ணப்பிக்க ஆட்சியர் வந்தனா கார்க் அழைப்பு

**திருவண்ணாமலை, ஜூலை 11:**
தமிழ்நாடு அரசின் சார்பில் பிற்படுத்த ப்பட்டோர், மிகப்பிற்ப டுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கீழ் திருவண்ணாமலை மாவட்டத்தில் மாணவர்கள் மற்றும் மாணவியர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக மொத்தம் 46 அரசு விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் பள்ளி மாணவர்களுக்கான 25 விடுதிகள், பள்ளி மாணவியர்களுக்கான 12 விடுதிகள், கல்லூரி மாணவர்களுக்கான 5 விடுதிகள் மற்றும் கல்லூரி மாணவியர்களுக்கான 4 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. பள்ளி விடுதிகளில் 4ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவி



யர்களும், கல்லூரி விடுதிகளில் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு, தொழிற்பயிற்சி (ஐ.டி.ஐ.) மற்றும் பாலிடெக்னிக் படிப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர்களும் சேர்க்கை பெற தகுதியுடையவர்கள்.

விடுதிகளில் தங்கும் மாணவர்களுக்கு முற்றிலும் இலவசமாக தங்கும் வசதி மற்றும் தினமும் மூன்று வேளை உணவு வழங்கப்படுகிறது. மேலும், 4ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு நான்கு இணை சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன.

அதேபோல், 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களின் உயர் கல்வி கனவுகளை நனவாக்கும் வகையில், நீட் (NEET), ஜே.இ.இ. (JEE) உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளுக்கான வினா வங்கி நூல்கள் மற்றும் சிறப்பு வழிகாட்டி புத்தகங்களும் வழங்கப்படுகின்றன.

விடுதிகளில் சேர விண்ணப்பிக்கும் மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களின் ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்திற்குள் இருக்க வேண்டும்.

மாணவர்களின் இருப்பிடத்திலிருந்து அவர்கள் பயிலும் கல்வி நிலையம் குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டருக்கு மேல் தொலைவில் இருக்க வேண்டும். இந்த தூர விதிமுறை மாணவியர்களுக்கு பொருந்தாது. விண்ணப்பப் படிவங்களை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்கள் மற்றும் காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் மாவட்ட பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பள்ளி விடுதிகளுக்கான சேர்க்கைக்கு வரும் 18.06.2026க்குள்ளும், கல்லூரி விடுதிகளுக்கான சேர்க்கைக்கு 15.07.2026க்குள்ளும் சமர்ப்பிக்க வேண்டும்.

மாணவர்கள் விண்ணப்பிக்கும்போது சாதிச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழை இணைக்கத் தேவையில்லை. விடுதியில் சேர்க்கை பெறும் நேரத்தில் மட்டும் அந்த ஆவணங்களை சமர்ப்பித்தால் போதுமானது. மேலும், தமிழ்நாட்டில் செயல்படும் ஒவ்வொரு அரசு விடுதியிலும் முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர் குழந்தைகளுக்காக தனியாக ஐந்து இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

எனவே, தகுதியுடைய பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் அரசின் இந்த சிறப்பு கல்வி நலத் திட்டத்தை பயன்படுத்தி பயனடைய வேண்டும் என திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.

# வெள்ளையம்மாள்புரம் அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா நேரில் ஆய்வு

**தேனி, ஜூன்.11**
தேனி மாவட்டம் சின்னமனூர் அருகில் உள்ள வெள்ளையாம்மாள்புரம் அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில்கம்பம் சட்டமன்ற உறுப்பினர் ஜெகநாத் மிஸ்ரா ஆய்வு மேற்கொண்டார் ஆய்வின் போது பள்ளியின் உள்கட்டமைப்பு வசதிகள் மாணவர்களின் கல்வித்தரம் மற்றும் அடிப்படைத் தேவைகள் குறித்து நேரில் கண்டறிவதற்காக இந்த ஆய்வு நடத்தப்பட்டது என்றார் ஆய்வின் போது பள்ளி தலைமையாசிரியர் உத்தண்டலட்சுமி முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்நித்யா,அருண் குமார் பட்டதாரி ஆசிரியர்மணிமொழி,காளீஸ்வரி, ராஜ்குமார் உடற்கல்வி ஆசிரியர் முருகன் மற்றும் ஆசிரிய ஆசிரியைகள் கலந்து கொண்டு சட்டமன்ற உறுப்பினருடன் கலந்துரையாடினார் மேலும் பள்ளியின் வளர்ச்சி குறித்து ஒரு சில முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தனர் பின்னர் எம்.எல்.ஏ. மாணவர்களின் வகுப்பறைகளுக்குச் சென்று மாணவ மாணவிகளுடன் மிக எளிமையாக கலந்துரையாடினார் பின்பு வழங்கப்படும் மதிய உணவு, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.





மேலும், மாணவர்களின் கல்வித் தேவைகள் மற்றும் பேருந்து வசதிகள்குறித்த கோரிக்கைகளையும் கேட்டறிந்து கவனத்தில் எடுத்துக் கொண்டார் ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் முன்வைத்த நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.மாணவர்கள் விடுதியில் எம்.எல்.ஏ.மதிய உணவான அசைவ உணவு அருந்தி சுவைத்தார் பின்னர் விடுதியின் காப்பாளரிடம் நான் வந்ததால் சுவையாக சமைத்தீர்களா இல்லை எப்போதும் உணவு இவ்வளவு சுவையுடன் தான் பறிமாறுகிரீர்களா சிரித்த முகத்துடன் கேட்டறிந்தார் எப்போதும் இதே அளவிற்கு சுவையான உணவை கொடுங்கள் என்று கூறி தன்னுடைய ஆய்வை நிவர்த்தி செய்தார்

.நிறைவு பெறும் தருவாயில் ஆசிரியர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

தேசபக்தி

11.06.2026 வியாழக்கிழமை

# குற்றாலம் மெயினருவியில் குளிக்க அனுமதிக்க கோரி குற்றாலம் சேர்மன் எம்.கணேஷ் தாமோதரன் மாவட்ட ஆட்சியரிடம் மனு

தென்காசி, ஜூன் 11

குற்றாலம் மெயினருவியில் சீரமைப்பு பணிகள்நிறைவுபெற்றநிலையில் பொதுமக்கள் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்க கோரி மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத்சிங்கிடம் குற்றாலம் பேரூராட்சி மன்ற தலைவர் எம்.கணேஷ் தாமோதரன் கோரிக்கை மனு ஒன்றை வழங்கினார்.



குற்றாலம் பேரூராட்சி மன்ற தலைவரும், குற்றாலம் பேரூர் அதிமுக செயலாளருமான எம்.கணேஷ் தாமோதரன் தென்காசி மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங்கிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்தார். அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது:

தென்காசி மாவட்டம் குற்றாலம் பேரூராட்சியானது உலகளவில் பிரசித்த பெற்ற புராதன காலம் முதல் சிறந்த சுற்றுலாத்தலமாக உள்ளது. குற்றாலத்தில் ஜுன் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் முடிய சீசன் காலமாக கருதி, வெளி நாட்டினர். சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக வந்து செல்வார்கள்.

இந்நிலையில் தற்போது சீசன் ஆரம்பித்து 15 நாட்களாகியும் பேரருவியில் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளை குளிக்க அனுமதிக்காமல் உள்ளதால், சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர். குற்றாலம் பேரருவியில் சுற்றுலாத்துறை மூலம் பணிகள் முடிவு பெறும் நிலையில், சீசன் ஆரம்பித்து பேரருவியில் நீர்வரத்து வந்த நிலையில், தற்போது பணிகள் மேற்கொள்வதற்கு சாத்தியமில்லை என்பதாலும் மற்றும் பேரருவி பகுதிகளில் சுமார் 70 கடைகள் பேரூராட்சி மூலம் குத்தகைக்கு விடப்பட்டு குத்தகைதாரர்கள் கடைகளை நடத்தி வருகிறார்கள். சுற்றுலா பயணிகள்மற்றும்பொது மக்களை பேரருவியில் குளிக்க அனுமதிக்காததால் கடைகளை குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்த குத்தகைதாரர்கள் மற்றும் பொதுமக்கள் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் சூழ்நிலை உருவாகி உள்ளது.


எனவே சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்கள் நலன் கருதி பேரருவியில் பொதுமக்கள் குளிக்க அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்வதாக இவ்வாறு அவர் அந்த மனுவில் தெரிவித்துள்ளார்.

# அரையும் குறையுமாக சாக்கடை கட்டும் பணி தீவிரம்; அலட்சியம் காட்டும் அதிகாரிகள்

## தேனி மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

தேனி, ஜூன்.11:

தேனி மாவட்டம் சின்னமனூர் நகர் பகுதியில் 27 வார்டுகள் உள்ள நிலையில் பல ஆண்டுகளாக அடிப்படை வசதியான சாக்கடை வசதி இல்லாமல் இருந்தது. தற்போது சாக்கடை கட்டும் பணி தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.





இதற்காக தற்போது அரசு சார்பில் நிதி ஏதும் ஒதுக்கப்பட்டுள்ளதா, ஒதுக்கப்பட்ட நிதியின் எந்த விபரமும் பொது மக்களுக்கு தெரியாத அளவிற்கு நகராட்சி நிர்வாகம் செயல்படுகிறது, இது ஒரு புறம் இருக்க 27 வார்டுகளில் ஒரு சில வார்டுகளில் மட்டுமே ஆக்கிரமிப்பு அகற்றப்படாமல், தெருவிற்கு தெரு பல மாறுபட்ட அளவுகளில் தரமற்ற சாக்கடை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

அப்பணியின் போது 3 அடி அகலத்தில் உட்புறம் 1 அடி நடுப்புறம்1 அடி வெளிப்புறம்1 அடி என 3 அடி அகலத்தில் சாக்கடை பணி தீவிரமாக நடைபெறும் பட்சத்தில் வானம் தோண்டுவது ஒரு நாள், மோல்டு அடைப்பது ஒரு நாள், கலவை சேர்பது ஒரு நாள், மற்றும் மோல்டு பிரிப்பது ஒரு நாள் என மொத்தம் 4 நாட்களில் அரையும் குறையுமாக பணி நிறைவு பெற்று வருகிறது.

இப்பணி நடைபெறும் போது கான்கிரீட் சரியாக மதிலில் பிடிக்காமல், மதிலை விட்டு விலகிய நிலையில் அதை சரி செய்வதற்கு விரிசல் உள்ள இடத்தில் பேட்ஜ் ஒர்க் வேலையாக சிமெண்ட் பால் ஊற்றி பொதுமக்களை "ஏமாற்றி" வருகிறார்கள் .இதுபற்றி ஒப்பந்ததாரரிடம் கேட்கும்போது பழைய மதிலோடு புது கான்கிரீட் ஒட்டாது என்று மிகச் சிறப்பாக விளக்கம் கூறியதோடு இந்த விரிசல்களுக்கு நடுவில் மறுபடியும் சிமெண்ட் பால் கலவை போடுவதால் அது அப்படியே பிடித்துக் கொள்ளும் என்றும் தெளிவான முறையில் பதில் அகத்ததும் குறிப்பிடத்தக்கது. இப்படி தரமில்லை என்று தெரிந்துதான் , பணி நடைபெறும் போது நகராட்சி அதிகாரிகள் யாரும் அருகில் இருப்பதில்லை குறிப்பாக ஒப்பந்ததாரரும் இருப்பதில்லை என்று சமூக ஆர்வலர் தங்களின் ஆதங்கத்தை கூறினார். சின்னமனூர் நகராட்சி நிர்வாகம் இப்படி அலட்சியமாக இருப்பதால் தான் மக்களின் வரிப் பணம் வீணாகிறது. மக்கள் வரிப்பணத்தை வீணடித்து கொண்டிருக்கும் அதிகாரிகள் மீதும் சாக்கடை ஒப்பந்தம் எடுத்த ஒப்பந்ததாரர் மீதும் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழகத்தில் காலியாக உள்ள 5 தொகுதிகளுக்கு விரைவில் இடைத்தேர்தல்

## பணிகளை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்

தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் 23ந்தேதி 17வது சட்டசபை தேர்தல் நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கை மே மாதம் 4ந்தேதி நடைபெற்ற நிலையில், விஜய் தலைமையிலான த.வெ.க. அதிக இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால், ஆட்சி அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மை எண்ணிக்கை (118) கிடைக்காததால், காங்கிரஸ், இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகளின் ஆதரவுடன் த.வெ.க. ஆட்சி அமைத்தது. முதல் அமைச்சராக ஜோசப் விஜய் பொறுப்பேற்றுக்கொண்டார். இந்த நிலையில், சட்டசபை தேர்தலில் திருச்சி கிழக்கு, பெரம்பூர் ஆகிய 2 தொகுதிகளில் ஜோசப் விஜய் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். பிறகு, திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை அவர் ராஜினாமா செய்தார்.




அதனைத் தொடர்ந்து, நம்பிக்கை வாக்கெடுப்பில் த.வெ.க. அரசுக்கு வாக்களித்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் எஸ். ஜெயகுமார் (பெருந்துறை), மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), பி.சத்தியபாமா (தாராபுரம்), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்) ஆகியோர் தங்களது பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்தனர்.

அதனைத் தொடர்ந்து, திருச்சி கிழக்கு (மே 10), பெருந்துறை (மே 25), மதுராந்தகம் (மே 25), தாராபுரம் (மே 25), அம்பாசமுத்திரம் (மே 26) ஆகிய தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்டன.

பொதுவாக, ஒரு தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டால், அதில் இருந்து 6 மாதங்களில் இடைத்தேர்தல் நடத்தியாக வேண்டும்.

அந்த வகையில், விரைவில் மேற்கண்ட 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற இருக்கிறது.

அதற்கான ஏற்பாடுகளை வரும் 22ந்தேதிக்குள் செய்யுமாறு மாவட்ட தேர்தல் அதிகாரிகளான, மாவட்ட கலெக்டர்களை தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. மேலும், 5 தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்தும் அதிகாரிகளையும், உதவி அதிகாரிகளையும் தேர்தல் ஆணையம் நியமித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.



தேனி மாவட்டம், காமாட்சிபுரம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 522 பயனாளிகளுக்கு ரூ.2,09,63,699/ மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன்,இ.ஆ.ப.,கம்பம்சட்டமன்றஉறுப்பினர்பி.எல்.ஏ.ஜெகநாத்மிஸ்ராஅவர்கள்முன்னிலையில் வழங்கினார்.

### பெண்கள் பாதுகாப்பில் புதிய மைல்கல்:

# திருவண்ணாமலையில் 'சிங்கப்பெண்' சிறப்பு அதிரடிப்படையை தொடங்கி வைத்தார் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் எம். சுதாகர்

திருவண்ணாமலை, ஜூன் 11:

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், தமிழக காவல்துறையின் முக்கிய முன்னெடுப்பான 'சிங்கப்பெண்' சிறப்பு அதிரடிப்படை திருவண்ணாமலை மாவட்டத்தில் இன்று அதிகாரப்பூர்வமாக தொடங்கி வைக்கப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்ட காவல் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் எம். சுதாகர், ஐபிஎஸ், சிறப்பு அதிரடிப்படையின் வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்து, படை வீராங்கனைகளின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பெண்கள், மாணவிகள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் குற்றச்செயல்களை தடுப்பதற்கும், அவசரகால சூழ்நிலைகளில் உடனடி நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த சிறப்பு அதிரடிப்படை உருவாக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் பள்ளிகள், கல்லூரிகள், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் பெண்கள் அதிகமாக பயன்படுத்தும் பகுதிகளில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும், பெண்களுக்கு எதிரான தொந்தரவு, பாலியல் சீண்டல், இணையவழி குற்றங்கள் உள்ளிட்ட புகார்களுக்கு விரைவான பதிலளிப்பு வழங்கவும், பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 'சிங்கப்பெண்' சிறப்பு அதிரடிப்படை செயல்படும் என காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.



நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் எம். சுதாகர், "பெண்கள் அச்சமின்றி கல்வி, வேலை மற்றும் அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட பாதுகாப்பான சூழலை உருவாக்குவது காவல்துறையின் முக்கிய கடமையாகும். அதற்கான ஒரு முக்கிய முயற்சியாக இந்த 'சிங்கப்பெண்' சிறப்பு அதிரடிப்படை செயல்படும். பொதுமக்களின் ஒத்துழைப்புடன் பெண்கள் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்றார்.

இந்த நிகழ்ச்சியில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணை காவல் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள், பெண் காவலர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

'சிங்கப்பெண்' சிறப்பு அதிரடிப்படை துவக்கப்பட்டதன் மூலம், திருவண்ணாமலை மாவட்டத்தில்பெண்கள்மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் புதிய பரிமாணத்தை எட்டியுள்ளதாக பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் காவல்துறையின் இந்த புதிய முயற்சி, மாவட்டத்தில் சட்டம்ஒழுங்கு மற்றும் சமூக பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வார இறுதி நாட்களை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் சிறப்பு பேருந்துகள் இயக்கம்

வார இறுதி நாட்களை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை), 13ந்தேதி (சனிக்கிழமை) மற்றும் 14ந்தேதி (ஞாயிறுக்கிழமை) வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்து இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிட்டுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு நாளை மறுநாள் 295 பேருந்துகளும், 13ந்தேதி 310 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு நாளை மறுநாள் 55 பேருந்துகளும், 13ந்தேதி 55 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்து இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்து பல்வேறு இடங்களுக்கும் 100 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாதாவரத்திலிருந்து நாளை மறுநாள் மற்றும் 13ந்தேதி ஆகிய நாட்களில் 20 பேருந்துகளும் இயக்கதிட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.




இந்நிலையில், இந்த வார இறுதியில் வெள்ளிக்கிழமை அன்று 7,446 பயணிகளும் சனிக்கிழமை அன்று 3,161 பயணிகளும் மற்றும் ஞாயிறு அன்று 7,379 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் Mobile App மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA